திட்டம் இருக்கிறதா? அவர்களாகவே முன்வந்து சொசைடியாக அமைத்து வீடு கட்ட விரும்பினல் துரிதமாக உதவிகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ராமகிருஷ்ணு தொழிலகத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். தொழிலாளர் பங்கும் இருக்கிறது. தொழிற்சாலை பங்கு 20 சதவிகிதம் இருக்கிறது. மீதி 50 சதவிகிதம் மானியமாகவும், மீதி கடனுகவும் தரப்படுகிறது. எந்தத் தொழிலாளர்களும் சங்கங்களை அமைத்துக் கொண்டு வீடுகள் கட்டிக்கொள்ள முன்வந்தால் அரசு உதவி செய்யும்.

திரு. கு. இராசமாணிக்கம்: வீட்டு வசதி வாரியம் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் வீடு கட்ட திட்டங்களைப் போட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதுபற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

E.S.I. Hospital, Coimbatore

* 522 *Q.*—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to increase the bed strength in the E.S.I. Hospital at Coimbatore; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) ஈட்டுறுதி செய்து கொண்ட 1,000 தொழிலாளர் குடும்பங்களுக்கு 11 படுக்கைகள் என்ற பழைய அளவுப்படி, 500 படுக்கைகள் கொண்ட அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை கோயம்புத்தூரில் கட்டப்பட்டது. ஆனல் ஈட்டுறுதி செய்து கொண்ட 1,000 தொழிலாளர் குடும்பங்களுக்கு 4 படுக்கைகள் என்று மாற்றியமைக்கப்பட்ட அளவு முறையைத்தான் பின்பற்ற வேண்டும் என்று தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் வற்புறுத்தியதன் பேரில், 300 படுக்கைகளுடன் கோவை அரசு தொழிலாளர்

1974 மார்ச் 20]

ஈட்டுறுதி மருத்துவமனை துவக்கப்பட்டது. அம்மருத்துவமனை யில் எஞ்சிய 200 படுக்கை வசதிகளைத் தொடங்கிவைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. என். குமாரசாமி: இந்த மருத்துவ மனையில் இடப் பற்றுக்குறை காரணமாக சிகிச்சை பெற்றுக் கொண்டிருக் கிறவர்கள் இட நெருக்கடி காரணத்தாலே பாதி சிகிச்சையோடு வெளியே அனுப்பப்படுகிறுர்கள். எனவே, 500 படுக்கைகள் கொண்டதாக இதை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழக அரசைப் பொறுத்த வரை 1,000 தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு 4 படுக்கைகள் போதாது; குறைந்தது 7 படுக்கைகளாவது வேண்டுமென்று மத்திய அரசுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறோம். பதில் கிடைத்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ள வீடுகள்.

* 523 வினு—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1973 எப்ரல் முதல் அக்டோபர் முடிய குடிசை மாற்று வாரியம் கட்டி முடித்துள்ள வீடுகள் எத்தனை?

(இ) எவ்வளவு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) 2,566 வீடுகள்.

(இ) ரூ. 186.12 லட்சம்.

திரு. சோ. அழகர்சாமி: குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் கீழ் கட்டப்படக்கூடிய வீடுகள் அங்கு எவ்வளவு குடிசைகள் இருந்தனவோ அந்த அளவுக்குத்தான் கட்டப்படுகிறதா அல்லது அதிகமாகக் கட்டப்படுகிறதா? அதிகமாகக் கட்டப்படுவதாக இருந்தால் அவை எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குடிசை மாற்று வாரியப் பகுதியில் மிகுதி இடம் இருந்தாலும் சில இடங்களில் அதிக வீடுகள் கட்டப்பட்டால் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 250 ரூபாய் சம்பளம் பெறுகிறவர்களுக்கு அந்த வீடுகள் ஒதுக்கப் படவேண்டுமென்று அரசு தீர்மானித்திருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS